DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 263/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 2 |
| | |
| Name | கிருஷ்ணவேணி |
| Father / Husband Name | உதயகுமார் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 02.05.2023.

-----------------------------------------------------------------------------------------------------------

(எதிரி ஆஜர்)

முதல் விசாரணை:

**(1)** நான் திருச்சி மாவட்டம் லால்குடி பெருவலநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுக்குடிதனம் நடத்தி வருகிறேன். அ.சா.1 என் அம்மா. ஆஜர் எதிரி என் இளைய அண்ணன். என் அப்பா 6 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அதன் பிறகு ஆஜர் எதிரி சொத்து கேட்டு பிரச்சனை செய்து வந்தார். என் மூத்த அண்ணன் பெயர் சிவக்குமார், என் அக்கா பெயர் நாகஜோதி. அ.சா.1க்கு தாங்கள் நால்வரும் பிள்ளைகள். எங்களுக்கு சொந்தமாக சிவகங்கை திருப்பத்தூர் ரோட்டில் வீடு உள்ளது.

(2) எங்கள் வீட்டில் தார்சு கட்டிடத்தில் கீழ் தளத்தில் என் பெற்றோரும், மேல் தளத்தில் என் மூத்த அண்ணனும், அண்ணன் மனைவியும் வசித்து வந்தனர். அதற்கு பின்னால் இருக்கும் ஓட்டுவீட்டில் ஆஜர் எதிரியான

என் இளைய அண்ணன் குடியிருந்து கொண்டு இன்னும் இரண்டு ஓட்டுவீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அந்த வீட்டின் வாடகையை ஏற்கனவே என் அம்மா பெற்றிருந்தார். ஆனால் தற்போது எதிரி தான் வாடகையை வாங்கிக் கொள்கிறார்.

(3) 29.08.2021ம் தேதி ஞாயிற்றுக் கிழமை மதியம் 2.00 மணியளவில் ஆஜர் எதிரி சொத்து பிரித்து கேட்டது தொடர்பாக எங்கள் வீட்டில் என் மாமா வீரைய்யா, அத்தை ராணி, மாமா மகள் மஞ்சுளா, அக்கா நாகஜோதி, அண்ணன் சிவக்குமார், நான், எனது கணவர் விஜயகுமார், ஆஜர் எதிரியான எனது இளைய அண்ணன் விஜயகுமார் மற்றும் நயினார்பட்டி சிவக்குமார் ஆகியோர் பேசும்போது ஆஜர் எதிரி தனக்கு முன்புறமுள்ள தார்சு வீடு வேண்டுமென கேட்டார்.

(4) அந்த தார்சு கட்டிடம் எனது பெரிய அண்ணனின் சம்பாத்தியத்தைக் கொண்டு கட்டப்பட்டதால் முழுவதுமாக கொடுக்க ஒத்துக்கொள்ளவில்லை. சொத்தில் பெண் பிள்ளைகளான எனக்கும், என் அக்காவிற்கும் பாகம் தரும்படி கேட்டோம். அதற்கு ஆஜர் எதிரி பெண் பிள்ளைகளுக்கு பாகம் கொடுக்கமுடியாது என மறுத்துவிட்டார். நீங்கள் இருந்தால் தானே சொத்து பிரித்து கேட்பீர்கள். உங்களை கொன்றுவிடுகிறேன். சொத்தை நானே வைத்துக்கொள்கிறேன் என்று ஆஜர் எதிரி சொன்னார்.

(5) ஆஜர் எதிரி என் பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டை காலால் உதைத்து தள்ளி எங்களைத் தாக்கி வெளியேற்ற முயற்சித்தார். அப்போது தடுக்க முற்பட்ட போது ஆஜர் எதிரி என் மாமா மனைவியான ராணி என்பவரை தாக்கி பிடித்து தள்ளியதில் தலையில் அடிபட்டது. என் அம்மாவையும், மாமா மகளையும் தாக்கி கீழே தள்ளிவிட்டார். என்னை அடிக்க வந்து என் சேலையை பிடித்து இழுத்துவிட்டார்.

(6) வீட்டின் பின்புறம் இருந்த பைப் லைன், வயர் ஆகியவற்றையும் வீட்டின் ஜன்னல்களையும் உடைத்து சேதப்படுத்திவிட்டார். கையாலும், கம்பை வைத்தும் தாக்கினார். பாட்டிலை வைத்து பொருட்களை சேதப்படுத்தினார். சொத்தில் எனக்கும், எனது அக்காவிற்கும் பங்கு கிடையாது என்று கூறி கொலைமிரட்டல் விடுத்தார். இதுசம்பந்தமான நடவடிக்கை எடுக்க கோரி காவல் நிலையத்தில் என் அம்மாவான அ.சா.1 புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

(1) அ.சா.1 புகார் கொடுக்க காவல் நிலையம் சென்ற போது நான் உடன் சென்றேனா என்றால் ஆமாம். காவல் நிலையம் செல்லும் போது என்னை போலிசார் விசாரித்தாரா என்றால் ஆமாம். புகாரை யார் எழுதியது என்றால் என் உறவினரான நயினார்பட்டி சிவக்குமார் என்பவர் எழுதினார். அவரையும் போலிசார் விசாரணை செய்தார்கள் என்றால் ஆமாம். புகாரை எழுதியதற்கு ஆதரவாக சிவக்குமார் என்பவர் கையொப்பம் செய்தாரா என்றால் ஞாபகமில்லை. எதிரி ஜன்னலை பாட்டிலை கொண்டு உடைத்தார் என்பதை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளோம் என்றால் அது தொடர்பாக வீடியோவைக் காண்பித்தோம். மேற்படி வீடியோவை போலிசார் பார்த்துவிட்டு எங்களிடம் கொடுத்துவிட்டனர்.

(2) புகார் கொடுத்தவுடன் சம்பவ இடத்தை போலிசார் பார்வையிட்டார்களா என்றால் ஆமாம். உடைந்த ஜன்னல் கண்ணாடிகளை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் ஞாபகமில்லை. சம்பவத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் ஆமாம். எதிரி என்னை கையால் தான் தாக்கினார். நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை.

(3) இந்த சம்பவத்தில் யார் யாருக்கு காயம் ஏற்பட்டது என்றால் அத்தை ராணி, அண்ணன் சிவக்குமார், மாமா மகள் மஞ்சுளா, எனது அம்மா ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. எனது அம்மாவை எதிரி தாக்க முயற்சித்ததில் கீழே விழுகப்போனவரை ராணி மற்றும் மஞ்சுளா தாங்கி பிடித்ததால் அவருக்கு காயம் ஏற்படவில்லை.

(4) நான் எனது அம்மாவும் எங்களுக்கு சிறிய காயம் என்பதால் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனது அம்மாவை எதிரி தாக்க முயற்சித்ததில் கீழே விழுகப்போனவரை ராணி மற்றும் மஞ்சுளா தாங்கி பிடித்ததால் ராணி மற்றும் மஞ்சுளாவை எதிரி தாக்கினார் என்ற விவரத்தினை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன்.

(5) எதிரி கையால் யாரை அடித்தார், கம்பால் யாரை அடித்தார் என்ற விவரத்தினை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது அத்தை ராணி மற்றும் மஞ்சுளா என்பவர்கள் எத்தனை நாள் மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் இரண்டு நாட்கள் இருந்தார்கள். மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகிவிட்டார்கள்.

(6) எதிரி எங்கள் அனைவரும் பொதுவாக பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார். என்னையும், எனது அக்காவையும் கொலை செய்துவிடுவதாக மிரட்டினார். நடந்த சம்பவத்தில் எதிரி விஜயகுமார் ஒரு ஆளாக எங்கள் பத்து பேரையும் தாக்கினாரா என்றால் ஆமாம். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மூத்த அண்ணன் சிவக்குமார், நான் எனது அக்கா சேர்ந்து கொண்டு எதிரியான இளைய அண்ணன் விஜயகுமாருக்கு எந்த சொத்தும் கொடுக்க கூடாது என்று ஒரு பொய் புகாரை கொடுத்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 02.05.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.